# கி. ராஜநாராயணின் நிலைநிறுத்தல் என்னும் சிறுகதைத் தொகுப்பில் சமுதாயச் சிந்தனைகள்

**ஜா. மாலா**

**உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை ,**

**இதயா கலை அறிவியல் கல்லூரி, பாக்கமுடையான்பெட்**

**இலாசுப்பேட் 605 008**

**மின்னஞ்சல்- maladadhavan2021@gmail.com**

59

**முன்னுரை**

தமிழ் இலக்கியங்கள் பல்வேறு காலக்கட்டங்களில் பலவகையான பரிணாமங்களோடு படைக்கப்பட்டுள்ளது. சங்ககாலம் தொடங்கி இக்காலம் வரை தோன்றிய இலக்கிய வகைகள் எண்ணற்றவை. பத்தொன்பது இருபதாம் நூற்றாண்டுகளில் தமிழில் தோன்றிய சிறுகதை இலக்கியங்கள் நமக்குப் புதியதால்ல என்றாலும் சிறுகதை இலக்கியங்கள் தமிழில் சிறந்து விளங்குவதற்கு புதுமைப்பித்தன், கி. ராஜநாராயணன் , தி.ஜானகிராமன், ஜெயகாந்தன். பிரபஞ்சன் போன்றவர்களின் இலக்கியத் தொண்டே காரணமாகும். அந்த வகையில் கி. ராஜநாராயணனின் நிலை நிறுத்தல் என்னும் தலைப்ிபில் கி. ராஜநாராயணன் அவர்களின் சமுதாயச் சிந்தனைகள் குறித்து எடுத்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

சமுதாயம்

சமுதாயம் என்பது பல மகக்ள் இணைத்து வாழும் அமைப்பைக் கொண்டது. இந்நிலை மக்கள் கூட்டாகச் சேர்ந்து செயற்படும் மன உணர்வால் ஏற்பட்டது. இவ்வாறு ஒருவரோடு ஒருவர் சேர்ந்து வாழ்தல் மனித இனத்தின் கட்டாயம் ஒன்று உணரப்பட்டது. என்று பண்பாட்டு மானிடவியல் என்ற நூலில் சுட்டுகிறார். சீ. பக்தவச்சல பாரதி அவர்கள். ‘கூட்டாகச் சேர்ந்து வாழும் மனித இனமே ‘சமூகம்” எனப்படும். சமுதாயத்தில் மிக முக்கியமான கூறாககத் திகழ்வது குடும்பமேயாகும். குடும்பம் எனில் தாய் , தந்தை, குழந்தைகள் ஆகியொரைக் கொண்ட ஒரு குழுவாகும். “குடும்பம் என்ற சொல்லுக்கு உறவு , ஒரு குடியில் உள்ளார், மனைவி, வீடு, உறவினர். குலம், குடிஇனத்தார் என்று தமிழிப் பேரகராதி பொருளுரைக்கின்றது.

**ஆசிரியர் அறிமுகம்**

தமிழ்ச் சிறுகதை உலகின் மிக முக்கியமான ஆளுமை கரிசல்காட்டு எழுத்தாளரான கி.ரா என்றழைக்கப்படும் கி. ராஜநாராயணன் ஆவார். கிஇரா. வின் முழுப்பெயர் இராமங்குல ஸ்ரீ கிருஷ்ண ராஜநாராயண பெருமாள் ராமானுஜ நாயக்கர் என்பதாகும். ஸ்ரீகிருஷ்ணராமானுஜம் இலட்சுமி அம்மாள் தம்பதியின் ஐந்தாவது மகனாக 1922 ஆம் ஆண்டு செப்டம்பர் 16 ஆம் தேதி இடைச்செவலில் பிறந்தார். பிறந்தது இடைச்செவல் என்றாலும் புதுச்சேரியை தம் வாழ்விடமாகக் கொண்டவர். புதுமைப் பல்கலைக்கழகத்தில் கவுரவ பேராசிரியாக பணியாற்றி நாவல்களும் , கட்டுரைகளும், நாட்டுப்புறக் கதைகளும் இவருடைய படைப்புக்களாக விரிந்து கொண்டே இருந்தாலும் தமிழ்ச் சிறுகதைகளில் தனக்கான முத்திரையைப் பதித்தவர் கரிசல் மண்ணின் மக்களையும் அவர்களின் வாழ்க்கையையும் மண் மணத்தோடு எதார்த்தமான மொழிநடையில் படைத்துப் படிப்போரை ஆட்கொள்பவர்.

**முதலாளி வர்க்கம்**

நிலைநிறுத்தல் சிறுகதையில் வரும் மிகமுக்கியமான பாத்திரங்களின் பண்ணையார் என்பவர் ஆவார். பண்ணையார் என்ற கதாபாத்தின் வழி முதலாளி வர்க்கத்தில் முழுமன ஆளுமையும் வெளிக்கொணர்ந்துள்ளார் ஆசிரியர். மாசாணம் என்பவன் தன் குடும்பத்தினருடன் பிழைப்பத்தேடி இவ்வூருக்கு வந்தவன் இவனைக் கண்ட மாத்திரத்திலேயே பண்ணையாருக்கு மிகவும் பிடித்திருந்தது. ஏனெனில்பதிமூணு பதினாறு வயதிருக்கும் பார்ப்பதற்கு நல்ல உழைக்கும் தோற்றம் கொண்டவனாக இருந்தான். அதனால் தன் வீட்டில் வேலைசெய்ய அழைத்துவரப்பட்டான். ஒரு வருடத்திற்கு ஒரு ஜோடி வேட்டி சாப்பாடு போதும் மாதம் “மூணு ரூபாய் ” தான் சம்பளம். அதுவும் பாதியிலே நின்றுவிட்டாள்

எதுவும் கிடைக்காது , மாசாணம் அடிக்கடி கூறும் ஒரு வரி ‘ “தீனி நல்ல தீனிதான் திறுக்குத்தான் பட்டு முடியல” என்பது தான். அப்படி என்றால் மூன்று வேளையும் உணவு கிடைக்கிறதோ இல்லையொ பண்ணையாரிடம் திட்டு வாங்கி சகிக்க முடியவில்லை என்று கூறுவன் மூலம் முதலாளிக்கே உரிய ஆதிக்க குணம் மேலோங்குவதைக் காணமுடிகிறது. ஒருமுறை மாசாணம் ஊர் சித்திரைப் பொங்கல் விழாவின் போது பகலில் வேலை செய்யுதுவிட்டு இரவு முழுவதும் நாடகம் பார்ப்பது என்று ஏழு நாள் நாடகமும் , வேலையும் என்றிருந்தவன் பண்ணையார் வீட்டுதானியப் பட்டரைகளுக்கு இடையில் படுத்தவன் ஒரு வாரம் முழுவதும் உறங்கிவிட்டான். ஊர் முழுக்க தேடியும் மாசாணம் கிடைக்கவில்லை அவன் ஊரைவிட்டு சென்றுவிட்டான் என நினைத்தவன் ஒரு அதிர்ச்சி பண்ணையாரின் வீட்டிலே அவனைக் கண்ட பேரதிர்ச்சி பண்ணையார் சாட்டையால் மாசாணத்தின் உடலை பதம் பார்த்துவிட்டார். இப்படி நதிலைநிறுத்தல் என்றும் சிறுகதையில் வேலையாட்களைச் சுரண்டும் அடிமைப்படுத்தும் முதலாளி வர்க்கத்தினரைப் பண்ணையாரின் கதாப்பாத்தின் வழி படைத்துக் காட்டியுள்ளார் ஆசிரியர் அவர்கள்.

**பழமொழிகளும் நம்பிக்கைகளும்**

பழமொழிகள்

இச்சிறுகதையில் ஆசிரியர் எண்ணற்ற பழமொழிகளையும் , நம்பிக்கைகளையும் கதாபாத்திரங்களின் வழி படைத்துக்காட்டியுள்ளார்.

- சோத்தை அன்றதிலேந்தும் நாத்தை அன்புதிலேந்தும் நெரிஞ்சிரும் பூளாக்கு ”.
- தேடிப்போகும் மூலிகை வந்து காலில் சிக்கிக் கொண்டதே
- ஆடுன்னா ஒரு சுறுகுப் பால் கொடுக்கணும் கிடான்னா ஒரு முட்டாவது முட்டனும்.
- குத்துப்படவன் தூங்கினாலும் குறைவயித்துக்காரன் தூங்கமுடிமா ?
- புழுத்த நாய் குறுக்கே போகாது.

நம்பிக்கைகள்

- தேத்துலேயிருந்து ஆடுக சரியா மேயாமே கூடிக்கூடி அடையது
- தூக்கணாங்குருவிகள் வேகமாய் கூடுகள் கட்டுவது.
- தரைப் புற்றுக்களிலிருந்து தேங்காய்ப்பூப் போன்ற வெண்ணிறத்தில் தங்களின் முட்டைகளை அள்ளிக்கொண்டு மேலோர் என்ற எறும்புக் கூட்டங்கள் கிளம்பிப் போவதைக் கண்டு.
- டொர்க்... பொறக் என்று ஒரு சொரித்தவனை சத்தம் கொடுப்பது.

போன்ற நம்பிக்கைகள் மக்கள் மத்தியில் நிலவுவதாக கூறுகிறார். கி.ரா அவர்கள். ஊரில் மழையின்றி பஞ்சம் ஏற்ட்ட போது மேற்கூறப்பட்ட நம்பிக்கைகள் அனைத்துமே மழை வறுதற்கான அடிப்படை ஆதாரங்கள் என்று கருதப்படுகிறது. மழை வருவதற்கான அறிகுறிகள் அனைத்தும் ஆடுகளுக்கும் , தூக்கணாங்குருவிகளுக்கும்,எறும்பு, தவளை போன்ற ஐந்தறிவு ஜீவராசிகளுக்கு தெரிந்திருப்பதன் மூலம் மக்கள் அதனை உண்மு பழமொழிகளும் நிலைநிறுத்தல் சிறுகதையின் வழி கி.ரா அவர்கள் வெளிப்படுத்தியுள்ளார்.

**சுயதொழிலின் சிறப்பு**

பண்ணையாரிடம் அடிவாங்கிய பின்பு ஊரை விட்டு போன மாசாணம் திரும்ப வரவே இல்லை. அவனுக்கு திருமணம் முடிந்திருந்தது. அவனின் மனைவியின் பெயரம் மாசாணம் தான். ஒரே பெயர் கொண்ட தம்பதிகள் கை , கால்களில் அளுக்கு பிடித்தால் எண்ணெய் தேய்த்து நீவி விட்டால் குணமாகும் என்று நம்பினர். மாசாணம் வெளியில் எவர் வீட்டிலும் வேலைக்கு நிற்காகல் சுயமாக விபூதி போடுவது மற்றும் தனக்கு பிடித்த வேலைகளைச் செய்து வந்தாள்.

சமுதயாச் சிந்தனை

சமுதாயம் என்று ஒவ்வொரு தனிமனிதனையும் உட்கொண்டதாக இருக்கிறது. சமுதாயத்தில் ஏற்படும் ஒவ்வொரு நிகழ்விற்கும் தனிமனிதனும் காரணமாகின்றான். ஊரில் ஏற்படும் ஒவ்வொரு இன்னல்களையம் கண்டுகொள்ளாமல் இருப்பது தவறு. ஒவ்வொருவரும் இணைத்து ஒற்றுமையுடன் செயல்பட வேண்டும் என்பதனை ‘மாசாணம்’ என்னும் கதாபாத்திரத்தின் வழி கி.ராஜநாராயணன் அவர்கள் உணர்த்தியுள்ள சமுதாய அக்கரை இங்கு நினைவுகூறத்தக்கது.

நிலைநிறுத்த் சிறுகதையில் ஊரில் பஞ்சம் ஏற்படுகிறது மக்கள் உணவிற்கு வழியின்றி சட்டிக்கிழங்கு, சானைக்கிழங்கு முதலிய கிழங்கு வகைகளை சிறிது காகம் உண்டு வாழ்கின்றனர். பிறகு தண்ணீரைக் குடித்து நாட்களை எண்ணிக்கொண்டிருந்தார்கள். பிழைப்புக்காக ஊரில் உள்ள சில மக்கள் கூட்டம் கூட்டமாக அங்கிருந்து வெளியேற ஆரம்பித்தனர்.

இந்த நிலையில் பிழைப்புக்காக ஊரை விட்டு பஞ்சம் பிழைக்க வந்தவன தாளும் தன் சொந்த ஊருக்கே திரும்பி விடலாம் என்று எண்ணாமல் தனக்கு இவ்வளவு காலம் உணவலித்த ஊருக்காகத் தான் ஏதேனும் செய்ய வேண்டும் செய்ய வேண்டும் என்று முடிவெடுத்தான். "தேரே பார்வதி அம்மன் கோயில்" முன் வந்து நின்றான். மழை பெய்கிறவரை இங்கேயே அம்மனுக்கு முன்னாள் உட்கார்ந்து பயணம் காக்கப் போவதாகவும் , மழை பெய்யாமல் போனால் பட்டினி இருந்து இங்கேயே உயிரை விடப் போவதாககத் தீர்மானித்து கிழக்கு பார்த்து அமர்ந்துகொண்டான். மூன்று நாட்களாக உண்ணாமலும் எவருடனும் பேசாமலும் தீர்மானமாக உட்கார்ந்திருந்தான். இவனுடைய வைராக்கியத்தைப் பார்த்த இயற்கை அன்னை மூன்றாவது நாள் ஆலங்கட்டி மழையைக் கொடையாக வழங்கினாள்.

**முடிவுரை**

'நிலைநிறுத்தல்' என்னும் சிறுகதையில் வரும் மாசாணம் என்னும் கதாபாத்திரத்தின் வழி தனிமனிதர்களுக்கு சமுதாயத்தின் மீது இருக்க வேண்டிய பற்றும் , பொறுப்பும் எண்ணவென்று அனைத்து தரப்பு மக்களும் உணரவேண்டியதன் அவசியத்தை உணர்த்தியுள்ளார். கி.ராஜநாராயணனின் "நிலைநிறுத்தல்" என்னும் சிறுகதையின் மூலம் சமுதாயத்தின் மீது அவர் கொண்டுள்ள அக்கரையும் பொறுப்புணர்வும் நன்கு புலனாகிறது.